<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 147/2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிவசங்கரன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலுக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.02.2025

<u>முதல் விசாரணை</u>

நான் சங்கர்நகரில்வசித்து வருகிறேன். EB ல் போர் மேன்னாக இருந்து ஓய்வு வேலை செய்து வருகிறேன். எனது நண்பர் குமரேசன் போன் செய்து எனது வீடு திறந்திருப்பதாகசொன்னார் தேதி, மாதம் ஞாபகம் இல்லை 2024ம் வருடம். எனது மனைவி பெங்களுர் மருத்துவமனையில் மணிப்பால் மருத்துவனையில் இதய சிகிச்சைக்காக இருந்தார். நான் இ ரவு கிளம்பி காலையில் வருவதாக சொன்னேன். காலையில் வந்து பார்த்தேன் வீடு திறந்திருந்தது பொருட்கள் கலைந்து இருந்தது. எதுவும் காணாமல் போனது போன்று தெரியவில்லை. பணம் ரூ.50000/- இருந்தது எடுத்து வைத்திருந்தார்கள் காணாமல் போகவில்லை. இது சம்பந்தமாக எனது நண்பர் குமசேரன் புகார் அளித்திருந்தார். இது சம்பந்தமாக போலிசார் விசாரித்தார்கள். பூட்டிய வீட்டை திறந்து நகை இருந்தால் திருடி செல்லலாம் என பார்த்துள்ளார்கள்.

1,3 <u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எந்த தேதியில் பெங்களூர் சென்றிர்கள் என்றால் ஒரு வாரத்திற்கு முன்பு சென்றேன். குமரேசன் புகார் கொடுப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு என்றால் ஆம். குமசேரன் எனது நண்பர் என்றால் ஆம் பக்கத்து வீட்டுக்காரர். குமசேரன் சொல்லி தான் தகவல் தெரியும் என்றால் ஆம். இந்த வழக்கு பற்றி வேறு எந்த தகவலும் தெரியாது என்றால் சரிதான் போலிசார் விசாரணையில் பெங்களூரில் இருந்து எப்போது புறப்பட்டு வந்திர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் ஞாபகம் இல்லை. குமசேரன் தகவல் சொன்னதன் பேரில் தான் இரவு கிளம்பி காலை வந்திர்கள் என்றால் ஆம்.

2. உங்கள் வீட்டில் பொருள் காணாமல் போகவில்லை என்றால் சரிதான். யார் திருட முயற்ச்சி செய்தார்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் ஆம். உங்களைசொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து விசாரிக்கவும் இல்லை நீங்கள் சொன்ன மாதிரி எந்த சம்பவமும் நடக்கவும் இல்லை என்றால் சரியல்ல. போலிசாரும் உங்கள் நண்பரான குமசேரன் என்பவரும் சொல்வதற்கு இனங்க பொய் சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. சண்முகம், சாபிக் என்பவர் உங்களுக்கு தெரிந்தவர்கள் என்றால் பக்கத்து வீட்டுக்கார் அவர்களை 30 வருடமாக தெரியும்.

4 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணயை தழுவிக்கொள்வதாக கூறினார். 2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.